# உலக பல்கலைக்கழகங்களின் தர வரிசையில் மலாயா பல்கலைக்கழகத்திற்கு 65 ஆவது இடம்

## 5 தனியார் பல்கலைக்கழகங்கள் சிறந்த அடைவு நிலை

கோலாலம்பூர், ஜூன் 10- உலகின் சிறந்த பல்கலைக் கழகங்களின் தர வரிசையில் நாட்டின் வரலாற்று சிறப்புமிக்க மலாயா பல்கலைக்கழகம் 65 ஆவது இடத்திற்கு சரிந்தது. ஆனால் அதேநேரத்தில் உல கின் 100 சிறந்த பல்கலைக் கழகங்களில் அதுவும் ஒன்றாக விளங்குகிறது.

வரும் 2022 ஆம் ஆண்டுக் கான உலக பல்கலைக்கழகங் களின் தரவரிசை ஆய்வின் முடிவுகள் வெளியிடப்பட்டன. உலகளாவிய நிலையில் 97 இடங்களில் உள்ள 1,300 பல்கலைக்கழகங்கள் இந்த ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. இவற்றுள் 22 மலேசிய பல் கலைக்கழகங்களும் அடங்கும்.




இந்த 22 மலேசிய பல் கலைக்கழகங்களில் குறைந்தது 12 பல்கலைக்கழகங்கள் தர நிலையில் வீழ்ச்சி அடைந்தன. யுபிஎம் எனப்படும் மலேசிய புத்ரா பல்கலைக்கழகம் 132 ஆவது இடத்திலிருந்து 143 ஆவது இடத்திற்கும் யுகேஎம் எனப்படும் மலேசிய தேசிய பல்கலைக்கழகம் 141 ஆவது இடத்திலிருந்து 144 ஆவது இடத்திற்கும் யுஎஸ்எம் எனப் படும் மலேசிய அறிவியல் பல்கலைக்கழகம் 142 ஆவது இடத்திலிருந்து 147 ஆவது இடத்திற்கும் மலேசிய தொழில்நுட்ப பல்கலைக்கழகம் 181 ஆவது இடத்திலிருந்து 197 ஆவது இடத்திற்கும் தள்ளப்பட்டன.

ஆனால் நாட்டில் உள்ள 5 தனியார் பல்கலைக்கழகங்கள் தர வரிசையில் முன்னேறி இருக்கின்றன. டெய்லர்ஸ் பல் கலைக்கழகம், யூசிஎஸ்ஐ , யுடிபி, யுயுஎம் ஆகிய பல் கலைக்கழகங்கள் சிறந்த அடைவு நிலையை பெற்றி ருக்கின்றன. குறிப்பாக டெய்லர்ஸ் பல்கலைக்கழகம் 379ஆவது இடத்திலிருந்து 49 ஆவதுஇடத்தை பிடித்திருக் கிறது. அதேபோல யுசிஎஸ்ஐ பல்கலைக்கழகம் 391 ஆவது இடத்திலிருந்து 44 ஆவது இடத்தையும்பெட்ரோனாஸ் தொழில் நுட்ப பல்கலைக் கழகம் 439 ஆவது இடத்தி லிருந்து 414 ஆவது இடத்தை யும் மலேசிய உத்தாரா பல் கலைக்கழகம் 520 ஆவது இடத் திலிருந்து 511 இடத்தி லும் சன்வே பல்கலைக்கழகம் 700 ஆவது இடத்திலிருந்து 651 ஆவது இடத்தையும் பெற் றுள்ளன.